# ஆண்கள் ஐக்கிய ஞாயிறு
## 19.06.2016
## வேதவினா - II இராஜாக்கள் புத்தகம்

மொத்த மதிப்பெண் : 50
நேரம் : 1 மணி

**I. ஒரு வார்த்தையில் பதில் எழுதுக - யார் இந்த இராஜா : (10)**

1. கர்த்தர் இந்த இராஜாவை வாதித்ததினால் அவன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து, தனித்து ஒரு வீட்டிலே வாசம் பண்ணினான்.

2. அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை.

3. அதற்கு எலிசா நீ சீரியாவின்மேல் ராஜாவாவாய் என்பதை கர்த்தர் எனக்குத் தெரிவித்தார். ... __________ அவனுக்கு பதிலாய் ராஜாவானான்.

4. தான் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்தான், ஆசாரியன் போதகம்பண்ணின் நாளெல்லாம் அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

5. பாபிலோன் ராஜாவினால் உயர்த்தப்பட்டு சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றப்பட்டு சகல நாளும் அவனக்கு முன்பாகப் போஜனம்பண்ணும்படியும் செலவுக்காக அனுதினமும் கொடுக்கப்பட செய்த இந்த யூதாவின் ராஜா யார்,

6. கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லம் செய்ய மனதை சாய்த்தான். அவனைப் போலொத்த ராஜா அவனுக்கு முன் இருந்ததுமில்லை அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை.

7. ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து இஸ்ரவேல் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும் இலட்சம் குறும்பாட்டுக்கடாக்களையும் செலுத்திவந்தவன்.

8. இவன் ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து ஐம்பத்து ஐந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய் செய்ய ஏவிவிட்டவன்.

9. என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச் செய்து, என் இருதயத்தில் இருந்தபடியெல்லாம் ஆகாபின் குடும்பத்திற்கு செய்தபடியால் உன் குமாரர் இஸ்ரவேலின் சிங்காசனத்தில்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பர்கள்.

10. தமஸ்குவிலுள்ள் பலிபீடத்தை கண்டு அதன் சாயலாக அசாரியன் மூலமாக செய்யப்பட்டு சர்வாங்க தகனபலியை ஒழுங்காக காலை மாலை பலிகளை செலுத்த ஆசாரியனுக்கு செய்ய கட்டளையிட்ட ராஜா.

**II கோடிட்ட இடத்தை எண்களால் நிரப்புக** (5)

1. எலிசா உயிர்ப்பித்த பிள்ளையின் தாய் பஞ்சம் வந்ததினால் பெலிஸ்தரின் தேசத்தில் ____________ வருடம் சஞ்சரித்தாள்
2. காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் ____________ பிள்ளைகளைப் பீறிப்போட்டது
3. அன்று இராத்திரியில் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் ____________ பேரைச் சங்கரித்தான்.
4. ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் ____________ மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் .
5. ஆகாசுடைய சூரிய கடிகாரத்தில் பாகைக்கு பாகை முன் போன சாகை ____________பாகை பின்னிட்டு திரும்பும்படி செய்தார்

**III. யார் யாரிடம் எப்போது கூறியது**:- {ஏதாவது ஐந்து (5)} (10)

1. இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்.

2. என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே (அல்லது) என் தகப்பனே என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே.

3. நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்.

4. என்னுடைய பிராணனும், உமது அடியாராகிய இந்த ஐம்பது பேரின் பிராணனும் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக ?

5. எனக்கும் உமக்கும் என்ன, நீர் உம்முடைய தகப்பனின் தீர்க்கதரிசிகளிடத்திலும், உம்முடைய தாயார் தீர்க்கதரிசிகளிடத்திலும் போம் என்றார்

6. சுக செய்தியா அந்த பைத்தியகாரன் உன்னிடத்தில் வந்தது என்ன ? என்று கேட்டார்கள்

**IV சரியான தீர்க்கதரிசியின் பெயரை பொருத்துக :** **(5)**

(எலியா, எலிசா, ஏசாயா, ஏரேமியா, யோனா, உல்தாள், எசேக்கியா, தீர்க்கதரிசியின் புத்திரர்)

1. எருசலேமின் இரண்டாம் வகுப்பில் குடியிருந்தவள் -
2. மரித்த மனுஷனின் பிரேதம் இவர் எலும்புகளில் பட்டதினால் உயிரடைந்தது -
3. காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாயின் குமாரன் -
4. ஆமோத்சின் குமாரன் -
5. மயிர் உடையைத் தரித்து, வார்கச்சையைத் தன் அரையிலே கட்டி கொண்டவர் -

**V. கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தன்னுடைய ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தை எப்படி நிறைவேறினது என்று இராஜாக்களின் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது (ஏதாவது இரண்டு)** **(5)**

1.

2

**VI. எலியா எலிசாவை தான் பரத்துக்கு எடுத்து கொள்ளுமுன் சந்தித்த 4 இடங்கள் எவை. அதில் ஏதாவது 2 இடங்களின் முக்கியதுவத்தை எழுதுக.** **(5)**

1.

2

VII இராஜாக்களின் புத்தகத்தில் சொல்லப்பட்ட இராஜாக்களில் ஏதாவது ஒரு இராஜாவைப்பற்றி 5 குறிப்புகளை எழுதுக. (அல்லது) எலிசா செய்த அற்புதங்களில் ஏதாவது ஐந்தை சுருக்கமாக எழுதுக (10)

1.

2.

3.

4.

5.